அதிபர் திலகம் அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களின் பொற்காலம்

கலாநிதி க.ஞானரெத்தினம்

கிழக்கின் ஒளியாகவும் கல்வியில் விருட்சமாகவும் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரி பல தசாப்தங்களாகத் திகழ்வதனை நாம் அறிவோம். இக் கல்லூரியின் வளர்ச்சியில் பல அதிபர்கள் வெவ்வேறு காலப்பகுதியில் அர்ப்பணிப்புடன் கடமை ஆற்றியுள்ளனர். இவர்களுள் அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்கள் கடமையாற்றிய 1972 முதல் 1999 வரையான 28 வருடங்கள் கல்லூரி வரலாற்றின் பொற்காலம் என்றே கூறலாம். 1972 ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக இக் கல்லூரிக்கு நியமனம் பெற்ற இவர், 1978 ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை அதிபராகவும் பணியாற்றினார். இக்காலத்தில் அவர், கல்லூரியின் முழுநேர சேவகனாகத் தொழிற்பட்டதோடு தனது வாண்மைத்துவத்தையும் விருத்தி செய்ததுடன் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்திக்கும் முன்னுரிமை அளித்து பொருத்தமான வழிகாட்டுதல்களையும் மேற்கொண்டார். இவர் பட்டமேற்கல்வி டிப்ளோமா, கல்வி முதுமாணி மற்றும் கலாநிதி பட்டங்களையும் பூர்த்தி செய்தார். அத்துடன் அதிபர் திலகம், வித்தியா சிரோமணி, தேசகீர்த்தி மற்றும் கீர்த்திஸ்ரீ ஆகிய கௌரவப் பட்டங்களையும் பெற்று சிறப்புப் பெற்றார். முக்கியமாக தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராக திகழ்ந்தார். இத்தகைய சிறப்பு மிக்க அணிகலன்கள் இவரின் “அதிபர்” என்ற வகிபாகத்திற்கு உயர் அங்கீகாரத்தைக் கொடுப்பதாகவும் ஆசிரியர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகவும் அமைந்திருந்தன.

1985 முதல் 2002 ஆம் ஆண்டு வரையான 18 வருடங்கள் இக் கல்லூரியில் அதிபர் திலகம் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் நான் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராக கடமை ஆற்றியிருந்தேன். அத்துடன் ஒழுக்கப் பொறுப்பாசிரியர், பரிசளிப்பு விழா, வாணி விழா மற்றும் மேபிள் இல்ல பொறுப்பாசிரியர், க.பொ.த(உ/த)விஞ்ஞானப் பிரிவு பகுதித் தலைவர், தரம் 2 தொடக்கம் 12 வரையான மாணவர் அனுமதிக்கான பொறுப்பாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளர் என பல்வேறு பதவிகளை வகித்திருந்தேன். இவை எனக்கு கிடைத்த பெரும் பேறாக இன்றும் நான் கருதுகின்றேன். இக்காலப்பகுதியில் இவரது கடமை உணர்வு, அர்பணிப்பு, நேர முகாமை, உயர் ஆளுமை, தூர சிந்தனை , முடிவெடுக்கும் திறன், புத்தாக்கம், தொடர்பாடல் திறன், கல்விப் புலமை , வாக்கு நாணயம், மற்றவரை கனம் பண்ணல், பன்முக சமய சிந்தனை, ஊக்குவித்தல் மற்றும் பாடசாலை சமூகத்துடன் கொண்ட நல்லுறவு போன்ற சிறந்த பண்புகளைக் கண்டு நாம் வியந்ததுண்டு. கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனைய அதிபர்கள் உட்பட அனைவருக்கும் இவர் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். கல்முனைப் பிரதேசம் எங்கும் இவருக்கு உயர்வான மதிப்பும் அங்கிகாரமும் இருந்தது.

இவரது சேவைக் காலத்தில் உயர் ஒழுக்கம் பேணும் நிறுவனமாக கார்மேல் பாத்திமா கல்லூரி விளங்கியது. பாடசாலை செயற்பாடுகள் யாவும் உரிய நேரத்திற்கு ஆரம்பிக்கும். அத்துடன் வியத்தகு முன்னேற்றங்களும் அபிவிருத்திகளும் கல்லூரியில் ஏற்பட்டன. கட்டுரையின் விரிவு அஞ்சி மிக முக்கியமானவை மாத்திரம் இங்கு குறிப்பிடுப்படுகின்றது. கல்லூரிக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கத் தொடங்கியது. 1986 காலப்பகுதியில் சுமார் 3500 மாணவர்களையும் 120 ஆசிரியர்களையும் கொண்ட ஒரு கல்லூரியாக இது திகழ்ந்தது. இவ் வேளையில் கிழக்கு மாகாணத்தில் அதி கூடிய எண்ணிக்கையான மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு கல்லூரியாக இது பதிவானது. இதுவொன்றே அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களின் தலைமைத்துவ சிறப்புக்கு கிடைத்த போதுமான குறிகாட்டியாகும். அதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தில் தேசிய பரீட்சைகளில் சாதனை செய்யும் ஒரு கல்லூரியாகவும் இது மாறத் தொடங்கியது. அத்துடன் இணைப்பாட விதான செயற்பாடுகளான தமிழ்மொழி தினம், ஆங்கில தினம், விளையாட்டுப் போட்டி என்பனவற்றிலும் கார்மேல் பாத்திமா கல்லூரி மாகாண மற்றும் தேசிய மட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. இவற்றின் காரணமாகவும் அதிபரின் அயராத முயற்சியினாலும் 1993 ஆம் ஆண்டு கார்மேல் பாத்திமாக் கல்லூரி தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. இதன் மூலம் அம்பாரை மாவட்டத்தில் முதலாவது தேசிய பாடசாலை என்ற பெருமையை இக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

கல்லூரியில் நடைபெறும் விழாக்களான பரிசளிப்பு விழா,வாணி விழா, ஒளி விழா, மீலாத் விழா மற்றும் ஆசிரியர் தினம் போன்ற பல்வேறு நிகழ்வுகள் முதல் தர நிகழ்வாக கல்விச் சமுகத்தால் அவதானிக்கப்பட்டன. நிகழ்வுகள் யாவும் சரியான நேரத்துக்கு தொடங்குவதும் அதிதிகள் யாவரும் உரிய நேரத்துக்கு முன்பே வருகை தருவதும் அபூர்வ நிகழ்வாகும். மேடை ஏற்றப்படும் நிகழ்வுகள் யாவும் குறைந்தது இரு தடவையாவது ஒத்திகை பார்க்கப்படும். அத்துடன் நிகழ்வுகளுக்கு வருகை தரும் விருந்தினர்கள் யாவரும் பெரும்பாலும் உயர் அதிகாரிகளாகவே இருந்தனர்.முன்னாள் ஜனாதிபதி R. பிரேமதாசா, முன்னாள் அமைச்சர்களான A.R.M மன்சூர், தயாரத்தின,M.H.M அஷ்ரப் போன்றவருடன் கல்வி அமைச்சின் செயலாளர்கள், பல நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், பல்கலைக்கழக உபவேந்தர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் போன்றோர் அழைக்கப்படுவார்கள். அனைத்து நிகழ்வுகளுக்கும் அப்போதைய திருமலை- மட்டு ஆயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மற்றும் ராமகிருஷ்ண மிஷன் மேலாளர் வணக்கத்துக்குரிய சுவாமி ஜீவானந்தஜி மகராஜ் ஆகியோரின் பிரசன்னமும் விழாக்களைச் சிறப்பிக்கும். இவற்றின் மூலம் விழாக்களின் உயர் தராதரம் பேணப்பட்டதோடு கல்லூரி தொடர்பான உயர் அபிப்பிராயங்களும் கல்வி அமைச்சு மத்தியில் ஏற்படுத்தப்பட்டது. இதனால் பல்வேறு வளங்களையும் கல்லூரிக்கு பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு எளிதாக்கப்பட்டது. அதிகமான நிகழ்வுகளுக்கு நான் மேடை முகாமையாளராகவும் அறிவிப்பாளராகவும் பங்கேற்றுள்ளேன். ஒரு நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் அடுத்த நிகழ்ச்சி விரைவாகத் தொடங்க வேண்டும், அறிவிப்புச் செய்யும்போது ஒரு சொல்லை மீண்டும் மீண்டும்

பயன்படுத்தக் கூடாது மற்றும் நிகழ்ச்சி நிறைவுறும் வரை மங்கள விளக்கு அணையக் கூடாது என்றெல்லாம் எமது அதிபர் ஆலோசனை வழங்குவார். மங்கள விளக்கை கவனிப்பதற்காகவே ஒருவர் நியமிக்கப்படுவார். முக்கியமாக நடன நிகழ்வுகளில் அதிக எண்ணிக்கையான மாணவிகள் பங்கேற்று மேடையை நிறைந்ததாக ஆற்றுப்படுத்த வேண்டும் என்பதும் இவரது எதிர்பார்ப்பாக இருந்தது. பாடசாலை உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறுகின்ற அணிகளுக்கு வழங்கப்படும் வெற்றிக்கிண்ணம் மிகப் பெரிதாக இருக்க வேண்டும் எனவும் பலபேர் சேர்ந்து அதனை தூக்க வேண்டும் எனவும் கருதி மிகப்பெரிய வெற்றிக்கிண்ணம் ஒன்றை கொள்வனவு செய்திருந்தார். இது போன்றதொரு வெற்றிக்கிண்ணம் அக்காலப் பகுதியில் இலங்கையில் எங்கும் இருந்திருக்காது என்பது எனது அபிப்பிராயமாகும். இத்தகைய செயற்பாடுகள் யாவும்“சிறியன சிந்தியாதே” என்ற அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களின் கருத்திற்கு உரம் ஊட்டுவனவாக அமைந்தன.

அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களது சேவைக்காலத்தில் ஆய்வு கூடங்கள், வகுப்பறைக் கட்டிடங்கள், நிர்வாக அலகுக் கட்டிடங்கள், சிசிலியாமேரி அரங்கு, ஆசிரியர்களுக்கான ஓய்வு அறை மற்றும் சுற்றுமதில் போன்றவை சிறப்பான முறையில் விஸ்திரிக்கப்பட்டன. இவர் கல்லூரியைப் பொறுப்பேற்ற போது ஒரே ஒரு பேண்ட் வாத்திய குழு மாத்திரமே இருந்தது ஆனால் அவரது சேவை காலத்தில் இது ஆறு பேண்ட் வாத்திய குழுவாக உயர்த்தப்பட்டது. வகுப்பறைச் செயற்பாடுகள் உயிரோட்டமாக நடைபெற்றன. ஆசிரியர்கள் உரிய நேரத்துக்கு வகுப்பறைக்குச் செல்வதும் பரீட்சைகள் உரிய நேரத்தில் நடைபெறுவதும் மாணவர்களின் தேர்ச்சி அறிக்கைகள் வழங்கப்படுவதும் சீராக நடைபெற்றன. இவர் பயன்படுத்திய CD 125 மோட்டார் சைக்கிள் கல்லூரியில் அனைவரினதும் பார்வைக்கு இருந்தாலே அனைத்து செயற்பாடும் ஒழுங்காக நடைபெறும். இவ்வாறு கல்லூரியில் தான் இல்லாத போதும் செயற்பாடுகள் செம்மையாக நடைபெறுவதற்கு பல உத்திகளைக் கையாள்வதும் இவரது பன்முக ஆளுமைக்கு எடுத்துக்காட்டாகும். அத்துடன் பாடசாலை சமூகத்துடன் நல்லுறவு உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டது. பொருத்தமானவர்களை இனங்கண்டு பொருத்தமான வேலைகளை ஒப்படைப்பதிலும் இவர் வல்லவர். இதனால் பல கடினமான பணிகளையும் மிகவும் இலகுவாக வெற்றி பெறக் கூடியதாக இருந்தது. ஆசிரியர்களின் ஆளுமை விருத்தியில் மிகவும் கூடிய கவனம் செலுத்தும் மாமனிதர் இவர். அதிபர் சேவை மற்றும் கல்வி நிர்வாக சேவைகளுக்கான பரீட்சைகளுக்கு ஆசிரியர்களை தயார் படுத்துவதற்காக வகுப்புகளை ஏற்பாடு செய்வார். தானும் பிறவளவாளர்களைக் கொண்டும் பிற்பகல் மற்றும் வார இறுதி நாட்களில் இவ்வகுப்புகள் நடைபெறும். இதன் மூலம் பலர் இச்சேவைகளில் நியமனம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். அதேபோன்று வறுமையான மாணவர்களுக்கு தங்கமிட வசதிகளும் பண உதவிகளும் செய்து அவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இவரது உயர்ந்த பண்பாகும். ஆசிரியர்களின் வீட்டில் நடைபெறும் சுக துக்க நிகழ்வுகளில் பங்கு கொண்டு அவர்களின் தேவைகளை அறிந்து பொருத்தமான உதவிகளைச் செய்வார். ஆசிரியர் கூட்டம் மிகவும் அமைதியாக கருத்து முரண்பாடுகள் எதுமின்றி நடைபெறும். ஆசிரியர் கூட்டத்திற்கு

முன்பாக முகாமைத்துவ கூட்டத்தில் அனைத்து விடயங்களும் தீர்மானிக்கப்பட்டு முடிவு செய்யப்படும். இம் முகாமைத்துவக் கூட்டம் அதிகாலையிலும் இரவிலும் நடைபெற்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

இவர் ஓர் ஆய்வாளர் என்பதும் முக்கிய விடயமாகும். பல ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் உலக திருச்சபை வரலாறு, தேடல், அன்பின் மலர்ந்த அமரகாவியம், ஶ்ரீராமகிருஷ்ண மடாலயத் தலைவர் சுவாமி ஜீவானந்தஜீ மகராஜ் , அமரத்துவம், சங்கு சுட்டாலும், கர்மயோகி பவுல் வரலாற்றுக் கண்ணோட்டம், சிறியன சிந்தியாதே போன்ற நூல்கள் விசேடமானவை. ராமகிருஷ்ண மிஷன் துறவி சுவாமி ஜீவானந்தஜீ மகராஜ் அவர்களுடன் அதிபர் திலகம் அவர்களுக்கு நீண்ட கால உறவு முறை இருந்தது. சுவாமிஜீ அவர்கள் சமாதி அடைந்த பிறகு அதிபர் மத்தியூ அவர்கள் சுவாமிஜீயின் பெயரில் ஒரு புலமைப் பரிசில் நிதியத்தை ஆரம்பித்தார். கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் முதன்மைச் சித்தி பெறுகின்றவருக்கு பட்டமளிப்பு விழாவின் போது இது வழங்கப்பட்டு வருகின்றது.

கார்மேல் பாத்திமாக் கல்லூரியின் உயர் வெற்றிக்கு அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களின் வழிகாட்டலுடன் பல அணியினர் பங்களிப்பு செய்திருந்தனர். எனது காலப்பகுதியில் இவருடன் கடமையாற்றிய பிரதி அதிபர்கள் மற்றும் உப அதிபர்களாக அருட் சகோதரிகளான M. சிசிலியாமேரி AC, M.லொறின்டா AC, M.புஷ்பராணிAC, M.வில்மா AC , M வசந்தமலர் AC அருட்சகோதரர் M.ஸ்ரீபன் மத்தியு இவர்களுடன் திரு K. தம்பிராஜா, ஜனாப் K.L.A வாகிட், திரு S. சின்னச்சாமி, திரு V. கிருஷ்ணபிள்ளை, திருமதி K. லோகிதராஜா, திருமதி S. புனேந்திரராஜா திரு R. சுகிர்தராஜன் (SLEAS), திரு V.ராஜேந்திரா, திரு K.ஞானரெத்தினம், திருமதி P. திருநாவுக்கரசு, திரு K. செல்வராஜா போன்றோரைக் குறிப்பிடலாம்.

அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்கள் கல்விப்புலத்தில் ஓர் இமயம். மலையகத்தில் பிறந்து கல்முனை பிரதேசத்திற்கு சேவை செய்து வந்த செம்மல். இவர் சிந்திக்காத விடயங்களே இல்லை. இவரது சிந்தனைகள் மற்றும் செயற்பாடுகள் யாவுமே முகாமைத்துவ புத்தகம். இவரது உயர் சிந்தனைகள் அனைத்தும் செயல் வடிவம் பெற்று கல்முனை பிரதேசமெங்கும் வியாபித்தன. இப் பிரதேச மக்களின் மனதில் இவர் என்றும் வாழ்வார். கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி என்றால் முதல் நினைவுக்கு வருபவர் அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்கள் தான் என்பது எனது கருத்தாகும். இக் கல்லூரி உள்ளவரை அருட்சகோதரர் S.A.I மத்தியூ அவர்களின் பெயரும் அவர் காட்டிய உயர் வழிமுறைகளும் வாழ்ந்து கொண்டே இருக்கும். இத்தனை உன்னதமான சேவை செய்த மகத்தான மாமனிதரின் சிறப்பான சேவைகளை சில பக்கங்களில் அடக்கிவிட முடியாது. இவரது சேவையை பாராட்டி 2001 ஆம் ஆண்டு கல்லூரி சமூகம் ‘‘பகீரதம்’’ என்ற பெயரில் ஒரு நினைவு மலரை வெளியிட்டிருந்தது. அவரின் சேவைகள் பற்றி மிகவும் விளக்கமாக ‘‘பகீரதம்’’ தருகின்றது . அவர் வாழும் போதே அவரை வாழ்த்திய மலர் பகீரதம் என்பதில் பெருமை கொள்கின்றோம்.